# மாகாணக் கல்வித் திணைக்களம்-வடக்கு மாகாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2019

| | | |
|---|---|---|
| தரம் – 10 | குடியியற்கல்வி | நேரம் - 3மணித்தியாலம் |
| சுட்டெண் ........................................ | பகுதி - I | |

**கவனிக்க:-**
(i) எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி இடுக.

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

1. நேரடி ஜனநாயக ஆட்சிமுறையின் பிறப்பிடமாகக் கருதப்படும் நகரம்
   1) உரோம் 2) லண்டன் 3) ஸ்பாட்டா 4) எதேன்ஸ்
2. கிரேக்க மொழியில் “Demos” என்பது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது
   1) ஆட்சி 2) சனநாயகம் 3) அதிகாரம் 4) மக்கள்
3. இந்தியாவில் பின்வரும் எந்த ஆரியக் குடியேற்ற அரசில் கி.மு 6 ஆம் நூற்றாண்டில் குழுவாட்சி முறை நிலவியமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
   1) வஜ்ஜி 2) கோசலம் 3) மகதம் 4) வத்சய
4. இரு கட்சி முறை நிலவும் நாட்டினைக் குறிக்கும் விடை எது?
   1) சீனா 2) பிரித்தானியா 3) இந்தியா 4) கியூபா
5. வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலைமை எவ்வாறு அழைக்கப்படும்.
   1) உரிமை 2) சமத்துவம் 3) சுதந்திரம் 4) சட்டம்
6. “மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சிமுறை சனநாயக ஆட்சிமுறையாகும்” இக்கருத்தைக்கூறியவர்.
   1) சீலர் 2) ஆபிரகாம்லிங்கன் 3) ஜீன்போடின் 4) அரிஸ்டோட்டில்
7. ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோன்றிய தேசிய அரசைக் கொண்ட நாடு எது?
   1) ஸ்பெயின் 2) ஜேர்மனி 3) போர்த்துக்கல் 4) இத்தாலி
8. ஒரு நாடு சட்டத்தின் மேன்மைக்கு உட்பட்டு ஆட்சி செய்யப்படுமாயின் அந்த ஆட்சி எவ்வாறு அழைக்கப்படும்
   1) ஒற்றையாட்சி 2) சட்டத்தின் ஆட்சி
   3) கூட்டாட்சி 4) சர்வாதிகார ஆட்சி



kalvi.lk

9. நேரடி சனநாயக ஆட்சி முறையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினை
   1) தற்கால அரசுகள் தேசிய அரசுகளாகக் காணப்படல்
   2) அரசுகளின் நிலப்பரப்பு விசாலமாகக் காணப்படல்
   3) சமூகத் தேவைகளை எளிதாக பெறக்கூடியதாக இருத்தல்
   4) தற்கால அரசுகளில் பல்வேறு அரசியற் கட்சிகள் காணப்படல்

10. அரசின் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்த அரசுக்குள்ள ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படும்
    1) கடமை 2) உரிமை 3) அதிகாரம் 4) சமத்துவம்

11. இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசில் தற்போது உள்ள பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
    1) 196 2) 224 3) 198 4) 225

12. "ஒரு இனத்துக்கு ஒரு அரசு" என்ற அரசியல் கோட்பாட்டிற்கு அமைவாகத் தோன்றிய அரசு
    1) நவீன அரசு 2) தேசிய அரசு 3) சமய அரசு 4) பொதுவுடமைஅரசு

13. சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரம்
    1) இறைமை எனப்படும் 2) சமத்துவம் எனப்படும்
    3) வாக்குரிமை எனப்படும் 4) அரசியலமைப்பு அதிகாரம் எனப்படும்

14. சட்டத்துறையின் மூலம் உருவாக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்
    1) நீதித்துறை 2) நிறைவேற்றுத்துறை
    3) பாதுகாப்புத் துறை 4) நிதித்துறை

15. A – நிதி நிர்வாகம் B – சட்டத்தை உருவாக்கல்
    C – மனித உரிமைகளைப் பாதுகாத்தல் D – அரசியல் யாப்பினை பாதுகாத்தல்
    மேற்கூறப்பட்ட அரசாங்கத்தின் கடமைகளில் நீதித்துறையில் கடமைகளை மட்டும் உள்ளடக்கிய விடை
    1) Cயும் Dயும் 2) Aயும் Dயும் 3) Bயும் Dயும் 4) Aயும் Bயும்

16. சமஷ்டி அரசொன்றில் அதிகாரப் பகிர்வு நடைபெறுவது
    1) பிரதமருக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்
    2) சனாதிபதிக்கும் மத்திய அரசுக்கும் இடையிலாகும்
    3) சனாதிபதிக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்
    4) மத்திய அரசுக்கும், பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்

17. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சிமுறையானது எவ்வாறு அழைக்கப்படும்
    1) ஒற்றையாட்சி 2) சமஷ்டி ஆட்சி
    3) மன்னராட்சி 4) சர்வாதிகார ஆட்சி

18. இலங்கையில் 1866 இல் பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட மாநகரசபை எது?
    1) கண்டி 2) கொழும்பு 3) யாழ்ப்பாணம் 4) காலி



(பக் 3 ஐப் பார்க்க)

kalvi.lk

19. 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் குறிப்பிட்டுள்ளபடி மாகாண சபையொன்றில் அமைச்சர்களின் எண்ணிக்கை முதலமைச்சரின் எண்ணிக்கையைத் தவிர்த்து

1) 4 ஆகும் 2) 5 ஆகும் 3) 6 ஆகும் 4) 7 ஆகும்

20. மாகாண சபை ஒன்றின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும் என்ற தலைப்பின் கீழ் முதலாவது நிரலில் அடங்கும் மாகாண சபைக்குரிய அதிகாரம் மற்றும் பணிகளின் எண்ணிக்கை

1) 17 2) 35 3) 36 4) 37

21. இலங்கையில் மாகாணசபை ஒன்றின் ஆளுநரின் பதவிக்காலம்

1) 3 வருடங்கள் 2) 4 வருடங்கள் 3) 5 வருடங்கள் 4) 6 வருடங்கள்

22. சுவிட்சர்லாந்தில் சமஷ்டி முறையின் அரசியல் கட்டமைப்பில் நிறைவேற்றுத்துறையின் ஏழு பேரையும் நியமனம் செய்யும் அதிகாரம் பெற்ற நிறுவனம்

1) தேசிய சபை 2) அரசசபை 3) சமஷ்டி சபை 4) சமஷ்டி பேரவை

23. பின்வருவனவற்றுள் ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசின் அதிகாரங்களுக்குள் **அடங்காதது**

1) உள்ளூராட்சியும் பெருந்தெருக்களும் 2) நிதி நடவடிக்கை

3) தேசிய பொருளாதார அபிவிருத்தி 4) வெளிநாட்டு வர்த்தகம்

24. பின்வரும் எந்த மொழி சுவிட்சர்லாந்தின் அரச கரும மொழிகளில் **அடங்கவில்லை**

1) இத்தாலிய மொழி 3) பிரான்சிய மொழி

2) உரோமானிய மொழி 4) ஆங்கில மொழி

25. வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்திய ஆசியநாடு

1) இந்தியா 2) தாய்லாந்து 3) சிங்கப்பூர் 4) நேபாளம்

26. சுவிஸ்லாந்தில் தற்போது காணப்படும் கென்ரன்களின் எண்ணிக்கை

1) 26 2) 49 3) 50 4) 13

27. 19வது அரசியல் திருத்தத்தின்படி இலங்கைப் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் எத்தனை வருடங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது

1) 4 வருடங்கள் 2) 5 வருடங்கள் 3) 4½ வருடங்கள் 4) 6 வருடங்கள்

28. இலங்கையில் செயற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் மொத்த எண்ணிக்கை (2017 – 05 – 01 ஆம் திகதியில்)

1) 271 2) 365 3) 335 4) 312

29. பின்வரும் நாடுகளுள் கூட்டாட்சி முறையினைக் கொண்டிருக்கும் நாடுகளைத் தெரிவு செய்க.

1) இந்தியா, ஐக்கிய அமெரிக்கா 2) இலங்கை, பிரான்ஸ்

3) அவுஸ்திரேலியா, பிரான்ஸ் 4) சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம்

30. சனாதிபதி அரசாங்க முறையின் விசேட பண்பாக கூறக்கூடியது

1) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்
2) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத் துறையை நேரடியாக கட்டுப்படுத்த முடியாது
3) சட்டத்துறையால் நிறைவேற்றுத் துறையைப் பதவி விலக்க முடியும்
4) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் நேரடித் தொடர்பு காணப்படும்



(பக் 4 ஐப் பார்க்க)

kalvi.lk

31. இலங்கையில் சனத்தொகை சமய அடிப்படையில் (குடிசன தொகை மதிப்பீடு – 2012 இன் அட்டவணையின் படி) 7.4% கொண்டவர்கள்.
   1) கிறிஸ்தவர்கள் 2) இந்துக்கள் 3) இஸ்லாமியர் 4) பௌத்தர்கள்
32. பின்வரும் நாடுகளுள் பன்மைப் பண்பாட்டுச் சமூக அமைப்பைக் **கொண்டிராத** நாடு எது?
   1) இந்தியா 2) ஐக்கிய அமெரிக்கா 3) நேபாளம் 4) இலங்கை
33. பின்வருவனவற்றுள் பண்பாட்டின் கூறு **அல்லாதது**
   1) மரபுகள் 2) நம்பிக்கைகள் 3) மொழி 4) முரண்பாடு
34. பன்மைப் பண்பாட்டுச் சமூகம் ஒன்றின் சிறப்பான செயற்பாட்டிற்கு **பாதகமாக** அமையும் பண்புக்கூறு
   1) இனமத பேதமின்றிச் செயற்படல்
   2) பிறர் கருத்துக்களை செவிமடுத்தலும் அவற்றிற்கு மதிப்பளித்தலும்
   3) பிற இனத்தவர்களின் மொழிகளைக் கற்றுக் கொள்ளுதலும் பயன்படுத்துதலும்
   4) சமத்துவமின்றிச் செயற்படல்
35. "முடிவுகளை மேற்கொள்வது தொடர்பில் சுதந்திரமாகச் செயற்படல்" இது நல்லாட்சியின் எவ்வகையான பண்புக்கூறு
   1) சமூகம் 2) பொருளாதாரம் 3) அரசியல் 4) பண்பாடு
36. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்பு தொடர்பான காரணி
   1) விஜயனும் தோழர்களும் வருகை
   2) சேனன் குத்திகன் ஆக்கிரமிப்பு
   3) பண்டு வாசுதேவனும் குழுவினரும் வருகை
   4) பத்தகச்சனாவும் சகோதரர்களும் வருகை
37. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் வெவ்வேறு நாடுகளில் இருந்து வியாபார வர்த்தக நோக்கில் வருகை தந்தவர்களுள் **அடங்காதவர்கள்**
   1) சீனர் 2) இந்தியர் 3) அரேபியர் 4) பிரான்சியர்
38. பின்வருவனவற்றுள் எந்தவொரு சமயத்தையும் அரச சமயமாக **அங்கீகரிக்காத** நாடு எது?
   1) இலங்கை 2) ஐக்கியஅமெரிக்கா 3) பாகிஸ்தான் 4) பங்களாதேசம்
39. இலங்கையில் சர்வசன வாக்குரிமைக்கான வயதெல்லை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது பின்வரும் எந்த ஆண்டில்
   1) 1958 2) 1959 3) 1956 4) 1957
40. இலங்கையில் 1939 ஆம் ஆண்டில் 61 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றம்
   1) மாநகர சபை 2) பிரதேச சபை 3) நகரசபை 4) கிராமசபை



(பக் 5 ஐப் பார்க்க)

kalvi.lk

# குடியியற்கல்வி - II

- **முதலாம்** வினா கட்டாயமானது
- முதலாம் வினாவுக்கும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1.

i) சனநாயக ஆட்சி முறை நடைபெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டு** தருக.

ii) அரசியல் கட்சி முறையில் அனுகூலங்கள் **இரண்டு** தருக.

iii) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் **இரண்டு** எழுதுக.

iv) உள்ளூராட்சி மன்றங்களில் நகரசபையின் தலைவர் (நகரபிதா) பதவி வகிப்போரின் அதிகாரங்களும் பணிகளும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

v) இலங்கையில் மூன்று மாவட்டங்களை மட்டும் கொண்ட **இரு** மாகாணங்களைக் குறிப்பிடுக.

vi) ஒற்றையாட்சி முறையின் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

vii) இலங்கையில் பல்கலாசாரச் சமூகம் உருவாகியதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் அமைவிடம் தொடர்பான காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

viii) பன்மைப் பண்பாட்டுச்சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

ix) பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

x) சனநாயக சமூகத்தில் நடைமுறைக்காக சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

($2\times 10 = 20$ புள்ளிகள்)

2.

i) அரசின் மூலக்கூறுகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) சட்ட ஆட்சியின் நடைமுறைப்பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

iii) a. தேசிய அரசுகளின் தோற்றத்திற்கான காரணிகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

b. தேசிய அரசுகள் பலமடைவதற்கு காரணமான அரசியல் சிந்தனையாளர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3.

i) இலங்கையில் அரசியல் யாப்புக்கமைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் மூலம் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்படும் போது பிரதான அளவீட்டு நியதிகளாகப் பயன்படுத்தப்படும் **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

ii) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

iii) சனநாயக ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில் அந்த ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சியின் பொறுப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)



(பக் 6 ஐப் பார்க்க)

kalvi.lk

4.

i) சனநாயக சமூகத்தில் பிரசைகளின் பிரதான கடமைகள் **இரண்டு** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) சனநாயக அரசொன்றின் பிரசைகளின் மீதான பொறுப்புக்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்

iii) சனநாயக ஆட்சி வெற்றி பெற அவசியமான **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

5.

i) ஒற்றையாட்சி முறையினைப் பின்பற்றும் **இரண்டு** நாடுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) சமஷ்டி அரசொன்றின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) சமஷ்டி ஆட்சி முறையின் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **மூன்றினையும்** குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

6.

i) மாகாணசபை ஒன்றின் நிறுவனக் கட்டமைப்பை வரிப்படத்தின் மூலம் வரைந்து காட்டுக. (2 புள்ளிகள்)

ii) மாகாணசபை ஒன்றின் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் அதிகாரங்களும், பணிகளும் **மூனறினைக் குறிப்பிடுக?** (3 புள்ளிகள்)

iii) மாகாணசபை ஒன்றின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும் வகுக்கப்பட்டுள்ள முறைமையின் கீழ் மூன்றாவது நிரலில் காணப்படும் **மூன்று** அதிகாரங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

7.

i) நல்லாட்சி என்ற எண்ணக்கரு தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

ii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரசையொருவரால் விருத்தி செய்யப்பட வேண்டிய நற்பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

iii) நல்லாட்சி தொடர்பாக ஒவ்வொருவரும் மதிப்பளிக்க வேண்டிய பெறுமானங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

### தரம் - 10

குடியியற்கல்வி - I,II | விடைகள் | புள்ளித்திட்டம்

### குடியியற்கல்வி - I

| | | | |
|---|---|---|---|
| 1. (4) | 11. (4) | 21. (3) | 31. (1) |
| 2. (4) | 12. (2) | 22. (4) | 32. (3) |
| 3. (1) | 13. (1) | 23. (1) | 33. (4) |
| 4. (2) | 14. (2) | 24. (4) | 34. (4) |
| 5. (3) | 15. (1) | 25. (3) | 35. (3) |
| 6. (2) | 16. (4) | 26. (1) | 36. (2) |
| 7. (1) | 17. (2) | 27. (3) | 37. (4) |
| 8. (2) | 18. (1) | 28. (3) | 38. (2) |
| 9. (2) | 19. (1) | 29. (1) | 39. (1) |
| 10. (3) | 20. (4) | 30. (2) | 40. (3) |

(40$\times 1 = 40$ புள்ளிகள்)

### குடியியற்கல்வி - II

1.

i)

- ஆட்சியின் சீரான தன்மையையும் அதன் நிலையையும் பாதுகாத்தல்
- மனித உரிமைகள் தொடர்பாக ஆளுவோரும், ஆளப்படுவோரும் அறிந்திருத்தல்
- ஆட்சியாளர்கள், தன்னிச்சையாகச் செயற்படுவதைத் தடுத்தல்
- நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படல்
- அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்
- ஆட்சி நிறுவனங்களின் மூலம் மக்கள் தமது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்தல்
- சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் சுலபமாகக் கிடைத்தல்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- மக்கள் தமது கருத்துக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்தல்
- எதேச்சதிகார ஆட்சியைத் தடுத்தல்
- பல்வகைமையிலும் ஒன்றுபட்டு செயற்பட வழிவகுத்தல்
- வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவுதல்
- மக்கள் மத்தியில் காணப்படும் பல்வகைத் தன்மை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படும்
- ஆளுங்கட்சியின் பாதகமான தீர்மானங்களை விமர்சிப்பதன் மூலம் அதனைத் திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு காணப்படும்.

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

iii)

- குறித்த நேரத்தினுள் தேர்தல் நடைபெறுதல்
- முறையான தகுதியுடையோருக்கு வாக்காளராவதற்கும் வேட்பாளராவதற்கும் உரிமை காணப்படும்
- சுதந்திரமான தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான உரிமைகள் காணப்படும்
- தேர்தல் சட்ட திட்டங்களுக்கு அமைய தேர்தல் நடாத்தப்படல்
- சுமுகமான சூழலில் தேர்தல் நடாத்தப்படல்

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

iv)

- நகர சபையின் நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படல்
- சபைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தல், தலைமை வகித்தல், ஒத்தி வைத்தல்
- மக்கள் பயன்பாட்டுக்கான சேவைகளை வழங்குவதில் இணைந்து செயற்படல்
- வரவு – செலவுத்திட்டத்தைத் தயாரித்தலும் அதற்கு சபையினரின் அனுமதியைப் பெறுதலும்
- தனது நிர்வாகப் பிரதேசத்துக்குரிய அபிவிருத்தியைத் திட்டமிடலும் அதனை செயற்படுத்துதலும்
- மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)



kalvi.lk

v) மேல்மாகாணம். மத்திய மாகாணம். தெற்கு மாகாணம், கிழக்கு மாகாணம்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

vi)

- இம்முறையின் கீழ் அரசாங்கம் இலகுவாகவும விரைவாகவும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.
- நிறைவேற்றுத் துறையும் நீதித்துறையும் முழு நாட்டிற்கும் பொதுவானதாக அமைதல்
- மத்திய அரசு, மாநில அரசுகள் எனும் இருவேறு அதிகார நிறுவனங்கள் இன்மையால் அவற்றுக்கிடையேயான முரண்பாடுகள் இந்நாடுகளில் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாகும்.

(இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள)

vii)

- ★ புவியியல் அமைவிடம்
- ★ இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை
- ★ இந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ளமை
- ★ கிழக்கு – மேற்கு வர்த்தகப் பாதையின் மத்தியில் அமைந்துள்ளமை

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

viii)

- பல்வேறு இனங்களைச் சேர்ந்த பல்வேறு நம்பிக்கைகளையுடைய பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் ஒன்றாக வாழ்தல்
- பல்வகைத்தன்மை காரணமாக ஒவ்வொரு கலாசாரத்திற்கும் உரியதான பழக்கவழக்கங்கள் மரபுகள் மற்றும் பண்பாட்டு அடிப்படைகள் காணப்படல்
- ஒரு இனக்குழுவினராக இருந்தபோதிலும் பிரதேச ரீதியான வேறுபாட்டைக் காணமுடிதல்
- பூகோளமயமாக்கல், தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி மற்றும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி என்பனவற்றால் முழு உலகமும் ஒரு கிராமமாகச் சுருங்கி இருப்பதால் கலாசாரச்சார சங்கமங்கள் மிகவேகமாக நிகழ்தல்
- தற்காலத்தில் உலக நாடுகளின் வாமும் மக்கள் இனரீதியாகத் தமது நாட்டு எல்லையைத் தாண்டிச் சென்று வேறு இனங்களுடன் கலந்து பல்வகைமைக் கலாசார சமூகவமைப்பொன்று உருவாகி இருத்தல்

(எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ix)

- இது பெயரளவு நிர்வாகம் மற்றும் உண்மை நிர்வாகம் என இரு பிரிவுகளைக்கொண்டு இருக்கும்
- சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவுசெய்யப்படும்
- சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் நேரடித்தொடர்பு காணப்படும்
- சட்டத்துறையால் நிறைவேற்றத்துறையைப் பதவிவிலக்க முடியும்
- நிறைவேற்றுத்துறை தனது செயற்பாடுகள் தொடர்பாக சட்டத்துறைக்கு பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

x)

- உண்மையானதும், சரியானதுமான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்
- பக்கச் சார்பற்றதும் சமூக நன்மை பயக்கக் கூடியதுமான தகவல்களை வழங்குதல்
- மக்கள் துயரங்களை ஆளுங்கட்சியின் கவனத்தில் கொண்டு வருதல்
- மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுதல்
- ஆட்சியாளர்களை சனநாயக வழியில் இட்டுச் செல்லல்
- நடைமுறைத் தகவல்களை உரிய நேரத்தில் மக்களுக்கு வழங்குதல்

(எவையேனும் இரண்டினைக் குறப்பிட்டால் 2 புள்ளிகள்)

2.

i) நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை (யாதேனும் இரண்டைக்குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- அனைவரும் சட்டத்தை மதித்தல், சட்டத்தை மீறாது இருத்தல், சட்டத்திற்கு அடிபணிதல்
- சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சர்வசாதாரணமாகக் கிடைத்தல்
- நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கு இணங்க குற்றவாளிகளைத் தண்டித்தல்
- சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள்
- குற்றப்பத்திரத்திற்கு அமைய மட்டுமே ஒருவரைக் கைது செய்தல்

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)


kalvi.lk

a)

- புரட்டஸ்தாந்து மத சீர்திருத்த இயக்கம்
- விஞ்ஞான மறுமலர்ச்சி
- விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்தமை
- மானியமுறை வீழ்ச்சியும், முதலாளித்துவத்தின் எழுச்சியும்

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

b) நிக்கலோ மாக்கியவல்லி, ஜீன் போடின், தோமஸ் ஹொப்ஸ்

(எவையேனும் இருவரைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

3.

i) நிலப்பரப்பு, சனத்தொகை (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- ஒரு நிர்வாகப் பரப்பில் காணப்படும் இனம். மதம், மொழி, வர்க்கம் ஆகிய வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாது அனைவரது கருத்துக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது.
- அரசியல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மக்கள் தலைவர்களைப் பிரதேச மட்டத்தில் உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தல்
- தேர்தல் தொகுதிகளுக்குப் பொறுப்பு கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கின்றது.
- பிரதேச அபிவிருத்திக்கு தேவையான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii)

- ஆளுங்கட்சியினது சிறந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக நடாத்தப்படுவதற்கு ஒத்துழைப்பினை வழங்குதல்
- ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை ஆராய்ந்து அபிவிருத்திக்கான விமர்சனங்களை முன்வைத்து ஆளுங்கட்சியை நல்வழிப்படுத்துதல்
- ஆளுங்கட்சியின் சனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தல்
- மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்காகச் செயற்படல்

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்கினால் 5 புள்ளிகள்)

4.

i) சட்ட ரீதியான கடமைகள், பண்பாட்டு ரீதியான கடமைகள் (ஒழுக்கவியல் கடமைகள்)
(இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்
- சமத்துவம் என்னும் மூலக் கொள்கையைப் பாதுகாத்தல்
- அரசியல் யாப்புக்கு அமைய செயற்படுதல்
- சட்டத்தினையும் நியாயத்தையும் பேணல்
- நாட்டின் வளங்களை நியாயமாகப் பகிர்ந்தளித்தல்
- அரச நிதியை பயன்படுத்தும் போது வெளிப்படைத் தன்மையைப் பேணல்
- சமூகப் பாதுகாப்பையும் நலன்களையும் பேணல்
- சுற்றாடலைப் பாதுகாத்தலும் பராமரித்தலும்

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii)

- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்
- சட்டத்தில் ஆட்சி நடைபெறுதல்
- நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படல்
- அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல்
- சிறந்த பொருளாதார நிலையில் நாடு இருத்தல் (பக்கம் 4 ஐப் பார்க்க)
- சுதந்திரமானதும் பக்கச்சார்பற்றதுமான ஊடகங்கள் இருத்தல்

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை சுருக்கமாக விளக்கினால் 5 புள்ளிகள்)

5.

i)

- இலங்கை, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் (இதே போன்று ஒற்றையாட்சி நடைபெறும் வேறு நாடுகளைக் குறிப்பிட்டாலும் புள்ளிகள் வழங்கவும்) (எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படுதல்
- மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உரிய அதிகாரங்கள், அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல்
- சட்டத்துறையில் மேற்சபையொன்று காணப்படுதல்
  உ- ம் - ஐக்கிய அமெரிக்காவின் செனட்சபை
- அரசியல் யாப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்
  உ – ம் - ஐக்கிய அமெரிக்காவில் சமஷ்டி நீதிமன்றம்

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)



kalvi.lk

iii) **நன்மைகள்**

- பல்லின சமூகமொன்றில் பல்வகைமைக்கு மதிப்பளிக்கும் வகையில் பொதுத்தேசியம் ஒன்றைக் கட்டியெழுப்பல்
- ஒரு அரசு கட்டளையிடும் வகையில் செயற்படுவதைத் தடுக்க முடியுமாயிருத்தல்
- சனநாயக ஆட்சி சக்தி வாய்ந்ததாகக் காணப்படல்
- பரந்த நிலப்பரப்பில் காணப்படும் அரசுகளில் நிர்வாக ரீதியிலான தீர்மானங்களை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)


**தீமைகள்**

- அதிகாரப் பங்கீட்டின் போது தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்கள் தொடர்பில் மாநில அரசுகள் அதிருப்தியுடன் செயற்படல்
- மாநிலங்கள் மத்திய அரசின் கொள்கைகளில் இருந்து விலகிச் செல்லும் போக்கு காணப்படும்
- இரண்டாம் மன்றம் ஒன்று செயற்படுவதால் சட்டவாக்க நடவடிக்கைகள் தாமதமடையும்
- மாநில நிர்வாகம் தொடர்பில் அனுபவமும் ஆற்றலும் மிக்க அதிகாரிகளுக்கான பற்றாக்குறை நிலவுவதனால் நிர்வாக முறை சீர்கெடல்
- மத்திய மாநில அரசுகள், யாப்பின் மூலம் தீர்வுகளுக்கு வரும்போது சில துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளால் நிர்வாகம் ஸ்தம்பித்தல்

(எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

6.

i)




சரியாக வரைந்து காட்டினால் 2 புள்ளிகள்

ii)

- மாகாண ஆளுநருக்கு ஆலோசனைகளை வழங்குதல்
- மாகாண வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல்
- மாகாண பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகத்திட்டமிடல் என்பனவற்றைத் தயாரித்தலும் அவற்றினை நடைமுறைப்படுத்தலும்

(மூன்றினையும் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii)

- திட்டமிடல்
- தேசிய வீடமைப்பும் நிர்மாணமும்
- சமூக சேவைகளும் புனர்வாழ்வும்
- விவசாயமும் கமநல சேவையும்

(மூன்றைக் குறிப்பிட்டு அதில் எவையேனும் ஒன்றை விளக்கினால் 5 புள்ளிகள்)

7.

i)
- ★ பொருளாதார வளர்ச்சியானது மந்தகதியில் காணப்படல்
- ★ சமூக நீதி வீழ்ச்சியடைந்திருத்தல் (இரண்டினையும் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

ii)

- பிற கலாசாரங்களை மதித்தல்
- பிறரது கருத்துக்களை செவிமடுத்தலும், அவற்றிக்கு மதிப்பளித்தலும்
- பிற சமயங்களுக்கு இடையூறு இல்லாது செயற்படுதல்
- முரண்பாடுகள் ஏற்படாத விதத்தில் செயற்படல்
- ஒவ்வொருவரது பண்பாடுகளையும் கலாசாரங்களையும் அறிந்து கொள்ளல்
- புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படல் ஒவ்வொருவருக்கும் மதிப்பளித்தல்
- பிற இனத்தவர்களின் மொழிகளைக் கற்றுக் கொள்ளுதலும் பயன்படுத்துதலும்
- ஒற்றுமையயாகச் செயற்படுவதன் மூலம் சுலபமாக வெற்றியடையலாம் என்பதைப் புரிந்து கொள்ளல்
- சமத்துவத்துடன் செயற்படல்
- சர்வதேச மத செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்

(எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

iii) அரசியல், சமூகம், பொருளாதாரம். கலாசாரம் ஆகியவற்றில் மூன்றினைக் குறிப்பிட்டு இவற்றுள் ஏதாவது ஒன்றினை விளக்கி எழுதி இருந்தால் (5 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page